**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 232/2013 P.W. 5/L.W.7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. தங்கராஜா | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day27.03.2024.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை** :

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் தற்பொழுது கருங்கல் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். இதற்கு முன்பு குளச்சல் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது மேற்படி காவல்நிலைய குற்ற எண். 196/2012 ச/பி. 294(பி),323, 506 பத்தி ஒன்று இ.த.ச 1860 ன் கீழ் வழக்குப்பதிவுச் செய்து வைத்திருந்த வழக்கு கோப்பை எனது புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன்.

2. 10.05.2012 ம் தேதி 15.30 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் பங்கிராஜ், மிக்கேல் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தையும் அதன் சுற்றுப்புறங்களையும் பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 மற்றும் பார்வை மகசர் அ.சா.ஆ.5 ஆகும்.** சாட்சிகளிடம் கையொப்பமும் பெற்றேன்.

3. பின்னர் சாட்சிகள் லீமாறோஸ், மரிய செல்வம், பங்கிராஜ், மிக்கேல் மற்றும் சிறப்பு உதவி ஆய்வாளர் சிந்தாமணி ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் நான் பணிமாறுதலாகி சென்றுவிட்டபடியால் வழக்குகோப்பை நிலையத்தில் ஒப்படைத்தேன்.

**குறுக்கு விசாரணை** :

நான் தாக்கல் செய்த வரைபடத்தில் எரியும் நிலையில் மின்கம்பம் எதுவும் சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரிதான். நான் சொன்னவிதத்தில் சம்பவயிடத்தில் வைத்து சாட்சிகளிடம் வாக்குமூலம் எதுவும் பெறவில்லை என்றால் நான் அந்தயிடத்தில் யாரும் சாட்சி சொல்ல முன்வராததால் நான் பதிவுச் செய்யவில்லை.

2. சம்பவயிடத்தில் சம்பவ நேரத்தில் பாதிக்கபட்ட நபருடன் அ.சா2 மட்டுமே இருந்துள்ளார் என்று சொன்னால் வேறு யாரும் இருந்ததாக சொல்லப்படவில்லை. கன்னத்தில் காயம் என்று

புகார்மனுவில் குறிப்பாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான். நான் சம்பவயிடத்தை முறையாக பார்க்காமலும் வாதிக்கு ஆதரவாகநிலையத்தில் வைத்து ஆவணங்களை தயார் செய்து உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.